Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 66** பஞ்சை போல் உறைந்த மழையைத் தருகிறார்; சாம்பலை போல உறைந்த பனியைத் தூவுகிறார் சங்.147:16 மார்ச் 2020 No.3

## கிறிஸ்தவ ஓட்டப்பந்தயம்

## *The Christian Race*

J.C. Ryle

"ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கப் பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" எபி.12:1.

**ஓட வேண்டிய ஒரு ஓட்டம்:-**

நமது சொந்த ஆயுதங்களும், பெலனும் நித்திய ஜீவனுக்கு வாசலைத் திறந்து, பரலோகத்தில் ஒரு இடத்தைப் பெற்றுத் தரும் என்ற எண்ணம் வேண்டாம். கிருபையால் மட்டுமே நித்திய ஜீவனைப் பெற முடியும். கிறிஸ்துவின் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றுகிறவர்கள் பல கஷ்டங்களை சகிக்கவும், கடின உழைப்பு, திகில்கள் போன்றவற்றை சகிக்கவும், வல்லமையான தேவ பணிக்காக அதிக கவனம் செலுத்தவும் வேண்டும். உள்ளே போராட்டங்களும் வெளியே பயங்களும், தவிர்க்க வேண்டிய கண்ணிகளும், எதிர்க்க வேண்டிய சோதனைகளும் நமக்கு உண்டு. உங்கள் சொந்த இருதயமே பொல்லாததாகவோ குளிர்ந்ததாகவோ, உலர்ந்து அல்லது மரித்து அல்லது மந்த நிலையிலோ காணப்படலாம். வேதத்திற்குப் புறம்பான ஆலோசனைகளை நண்பர்கள் உங்களுக்கு அளிக்கலாம். உறவினர்கள் உங்கள் ஆத்துமாவுக்கு எதிராகப் போராடலாம். சுருங்கக் கூறின் எப்பக்கத்திலும் இடறுதலுக்கேதுவான தருணங்களாகக் காணப்படலாம். உங்கள் ஜாக்கிரதை, விழிப்பு, தெய்வீக உணர்வு, ஜெபம் ஆகியவை மிகுதியாகத் தேவைப்படுகிறது. **கிறிஸ்தவர்களாய் வாழ்வது எளிதல்ல என்பதை விரைவில் கண்டு கொள்வீர்கள்.**

**கொடுக்கப்பட்ட தங்கள் காலத்தை விருப்பம் போல செலவு செய்து சொகுசாக வாழுகிறவர்கள், நித்திய மகிமையில் பரிசுத்தவான்களின் கூட்டத்தோடு சேர்க்கப்படாமல் நித்திய ஆக்கினைக்குட்படுவார்கள்.** உலக உல்லாசங்களில் ஈடுபடுபவர்களும் பரத்தைக் குறித்த சிந்தனையே இல்லாமல் உலக காரியங்களையே பேசிக் கொண்டிருப்பவர்களும், மார்க்கம் என்பது ஒரு சில ஞாயிற்றுக்கிழமைகளை அனுசரிப்பது மட்டுமே என்று எண்ணுகிறவர்களும், கிறிஸ்தவ ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவர்களல்ல. வெற்றி பெற அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். உங்களை நீங்களே நிதானித்துப் பாருங்கள்!

ஓடுகிறோம் என்று சொல்லிக் கொண்டு, சாலையோரத்தில் சோதனைகளுக்குட்படுகிறவர்களும், நின்று மூச்சு வாங்குகிறவர்களும், பின்னாலே பார்த்து தங்கள் சாதனைகளைப் பிரசித்தம் பண்ண விரும்புகிறவர்களும் சீராக ஓடுகிறவர்களல்ல. அவர்கள் கிறிஸ்தவர்கள் எனப் பெயர் பெற்றிருந்தாலும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடவில்லை. ஆனால் தேவனால் போதிக்கப்பட்டு அழைக்கப்பட்டவர்கள் இவ்வுலகத்தின் தூக்கமயக்கமான மக்களை விட வித்தியாசமாயிருப்பார்கள். அவர்கள் வீணான களியாட்டுகளில் சமயத்தை செலவிடுவதில்லை. அவர்கள் கண்கள் இலக்கையே நோக்கியிருக்கும். அவர்கள் எண்ணங்கள் தாங்கள் நடக்க வேண்டிய இடுக்கமான பாதையிலும், பெற்றுக் கொள்ளவிருக்கும் கிரீடத்திலும் குவிந்திருக்கும். அவர்கள் பாடுகளை ஏற்றுக் கொண்டு, உலகத்தையே உதறிவிட்டு தங்கள் ஓட்டத்தை சந்தோஷமாக முடிக்க விரும்புவார்கள். அனேகர் இவ்வாறு நமக்கு முன்பாக ஓடி முடித்திருக்கிறார்கள் அல்லவா!

"மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்". அவர்கள் எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முற்பிதாக்களும், தீர்க்கதரிசிகளுமே. அதோடு அப்போஸ்தலர்களும், அவர்கள் அனுபவித்த பாடுகளும் நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். நம்மைப் போலவே அனைவரும் பலவீன பாண்டங்களாயிருந்தனர். பலவீனமும், குறைகளும் அவர்களிலிருந்தன. சோதனைகளும், பாரங்களும் அவர்களை சூழ்ந்திருந்தன. துன்புறுத்தப்பட்டவர்களும், தனிமைப்படுத்தப்பட்டவர்களும் அயலாருக்கு நிந்தையாகவுமிருந்தனர். கொடுமையான பரிகாசங்களால் சோதிக்கப்பட்டனர். அவர்கள் சகிக்காத பாடுகளில்லை என்று சொல்லலாம். நமக்குக் கிட்டாத எந்த ஆறுதலையும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. தங்கள் தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் இருதயம் தேவனோடிருந்தது. சித்தம் இருந்தால் மட்டுமே ஓடமுடியும் என்பதற்கு அவர்கள் மாதிரியாயிருந்தனர். அவர்கள் நம்மைப் போலவே மாம்சமும் இரத்தமுமுடையவர்களாயிருந்தாலும், கிருபையினால் புது சிருஷ்டிகளாக்கப்பட்டு, விசுவாசத்தால் நற்சாட்சி பெற்று வாழ்ந்தார்கள். எபி.11:2, 33-37 வசனங்களைத் தொடர்ந்து படியுங்கள். கிருபை அதிக அளவில் பெருகினபடியால் நல்ல போராட்டத்தைப் போராடி, விசுவாசத்தைக் காத்துக் கொண்டு ஓட்டத்தை முடித்து சீயோனை எட்டினார்கள்.

**ஓடுகிறோம்** என்று சொல்லிக் கொண்டு, சாலையோரத்தில் சோதனைகளுக்குட்படுகிறவர்களும், நின்று மூச்சு வாங்குகிறவர்களும், பின்னாலே பார்த்து தங்கள் சாதனைகளைப் பிரசித்தம் பண்ண விரும்புகிறவர்களும் சீராக ஓடுகிறவர்களல்ல. அவர்கள் **கிறிஸ்தவர்கள்** எனப் பெயர் பெற்றிருந்தாலும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடவில்லை.

சோர்ந்துபோகிற கிறிஸ்தவனே, திடன்கொள்! நீ ஓடுகிற ஓட்டத்தை மேகம்போன்ற திரளான சாட்சிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இத்தகைய ஓட்டத்தை ஓடி முடித்தவர்கள். நீ அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவர்களால் பாதுகாவலுடன் கடந்து வந்ததுதான். உன்னைப் போன்ற திகிலும், சந்தேகமும் நிறைந்த அவர்கள் மரண இருளின் பள்ளத்தாக்கையும் பத்திரமாகக் கடந்து வந்துவிட்டனர். அவர்களுக்கும் பயங்களும், கவலைகளும் இருந்தன. ஆனால் உலகம், மாம்சம், பிசாசு ஆகியவை தேவனுக்கு நேராகத் தங்கள் கண்களை ஏறெடுக்கும் எந்த பலவீன விசுவாசியையும் தடுமாறச் செய்யாது. எனவே நமக்கு முன்னால் சென்ற சாட்சிகள் உங்களைப் போலவே கசப்பு, கண்ணீர் போன்றவைகளைக் கடந்து சென்றும் மடிந்து போகவில்லை. அவர்கள் அனைவரும் பரம வீட்டை சென்று சேர்ந்தனர் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

**பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு:-**

நமது ஆத்துமாவிற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளை விட்டு விட வேண்டும். ஓடுவதின் வேகத்தை அதிகரிப்பதற்குத் தடையாயிருக்கும் பெரிய ஆடைகளை அகற்றும் ஓட்டக்காரனைப் போல நாம் அகற்ற வேண்டியவைகளை அகற்ற வேண்டும். பரலோகம் செல்லும் பாதையில் தடையாயிருக்கும் மாம்ச சிந்தை, கண்களின் இச்சை, வாழ்வின் பெருமை, ஐசுவரியத்தின் மயக்கம், இன்பங்கள், மதிப்பு ஆகியவற்றின் மீதுள்ள நாட்டம், வெதுவெதுப்பான ஆவி, தேவனுக்கேற்றவைகளில் கவலையீனம், நிர்விசாரம் ஆகியவை விட்டுவிடப்பட்டால் மட்டுமே

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)


Advisory Board : T. Peter, D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

## இம்மாத பொன்னான சிந்தனை

**முட்கள் நிறைந்த ஒரு காட்டினூடே கடந்து செல்வது போன்றதே இவ்வுலக வாழ்க்கை. எப்போதும் நம் சரீரம் காயப்பட்டு இரத்தம் வடிகிறது. ஆனால் தேவனுடைய பிள்ளையே, சோர்ந்து போகாதே! பொறுமையிழக்காதே! இது கடினமான பாதைதான். தேவன் மனிதனை பாடுகளுக்காக மாத்திரம் படைக்கவில்லை என்று தெரிவிக்கும் நாள் சீக்கிரம் வருகிறது.**

## வாக்குத்தத்தம்

**சீயோனோ : கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள்.**

**ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை ஏசாயா 49:14,15**

### கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

**2020** மார்ச் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். இம்மாதம் சில வாசகருடைய கடிதங்களை மாத்திரம் ஆசிரியர் கடிதத்தில் அச்சிடுகிறேன்.

Kanchipuram,17.12.2019

கர்த்தருக்குப் பிரியமான சகோதரர் வெஸ்லி தேவதாசன் அவர்களுக்கும், தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும், உங்களுடன் பணியாற்றும் சக ஊழியர்களுக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துதலை கூறிக்கொள்கிறேன்.

தங்கள் தகப்பனார் காலத்திலிருந்து 40 வருடங்களாக தங்கள் பத்திரிகை வருகையின் தூதன் என் வீடு தேடி எனக்கு மாதந்தோறும் நற்செய்திகள், அறிவுரைகள், மிஷனெரிமார்களின் பணியைப் பற்றியும், அற்புதங்கள் அதிசயங்களைப் பற்றி வாசித்து அதன்படி நடக்கவும் தூதன் வழியாக விளக்குகிறார். மேலும் உங்கள் பணியிலுள்ள கஷ்டங்களை வாசிக்கும் போது மன உருக்கம் ஏற்படுகிறது. இவ்வளவு பாடுகள் மத்தியிலும் பட்டியலிட்டு, உபவாச கூட்டங்களை நிறைவுள்ளதாக்கி வருகிறீர்.

....... என் கணவர் திருந்தி கடைசி நேரத்திலாவது இறைவனுக்கு பயந்து வாழ ஜெபியுங்கள். மேலும், கிறிஸ்மஸ்க்காக இந்த ஏழையின் காணிக்கை ரூ.500/- அனுப்பி இருக்கிறேன், பெற்றுக்கொள்ளவும்.

**இயேசுவில் சகோதரி, G.V.K.**

*****

Malaysia, 05.12.2019

கிறிஸ்துவுக்குள் அன்பான பாஸ்டர் ஐயா அவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரி எழுதுவது, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஸ்தோத்திரம்.

தாங்கள் செய்கிற ஊழியத்திற்கென்று 29.11.2019-ல் (1679 ரூபாய்) ஆயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்பது ரூபாய் மகள் மூலமாய் அனுப்பியிருக்கிறேன். தயவுசெய்து பெற்றுக் கொள்ளுங்கள் ஐயா. தங்களுக்காகவும் தாங்கள் செய்கிற ஊழியத்திற்காகவும் ஜெபிக்கிறேன். எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள் ஐயா. கர்த்தர் தாங்கள் செய்கிற ஊழியத்தை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் அன்பான பாஸ்டர் ஐயா அறிவது, என்னுடைய அன்பு கணவர் 10.12.2018-ல் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் காணிக்கை அனுப்ப தாமதமாகிவிட்டது. தொடர்ந்து பத்திரிகை அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். வருகையின் தூதன் பத்திரிகை எனக்கு மிகவும் பிரயோஜன மாக இருக்கிறது.

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரி**
Mrs. **S.D.**

*****

**துக்காப்பேட்டை, .... .01.2020**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அவர்கட்கு இறைமகன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இன்று EMO மூலம் காணிக்கை ரூ.500/- தங்களுக்கு அனுப்பியுள்ளேன். எனக்கு தற்போது 86 வயது முடிந்து 87-ம் வயது ஆரம்பித்துள்ளது.

வயதான காலத்தில் எனக்கு மனக்கவலை ஏற்பட்டுள்ளது. தங்களின் மாத இதழ் “வருகையின் தூதன்” படித்துவர ஆண்டவர் கிருபையை பெற்றுள்ளேன்.

என் மகன் தே.ஜெயபால் கென்னடி வயது 56, அவனுக்கு 1 ஆண், 1 பெண் உண்டு. மனைவி CMC மருத்துவ மனையில் பணிசெய்து வருகிறாள்.

மகனுக்கு உணவு குழாயில் மூச்சுக்குழாய் அருகில் சளிக்கட்டி மூச்சு விட முடியாமல் கஷ்டப்பட்டான். C.M.C.H-ல் சேர்த்து சிகிட்சை பெறுகிறான், பூரண சுகம் இல்லை. அவனுக்கு சுகம் ஏற்பட பல ஊழியர்களுக்கும் வேண்டு கோள் விடுத்துள்ளேன். மறைந்த ஊழியர் தேவதாசன் அவர்களின் குமாரனாகிய தங்கள் கனிவான ஜெபத்துக்கு வேண்டுகிறேன்.

**அன்பன், D.D.A.**

*****

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

**உதவி** : 94897 40295
**அலுவலகம்** : 95432 21008

ஏதேனும் ஒன்றை **விருப்பமானது** என்று பிடித்து வைத்திருக்கிறாயா? அதை தூரப்படுத்துவதில் கண்டிப்பாயிரு. அதை வேரோடு பிடுங்கி அகற்றி விடு. இல்லாவிட்டால் அது உன் **ஓட்டத்தைத்** தடுக்கும்.

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2020
## Heart cry for Revival 2020

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 04.01.2020<br>1-வது சனி | NIMS Church<br>Sundarapandiam |
| பெப்ரவரி | 08.02.2020<br>2-வது சனி | Christian Assembly Mission<br>Ayanavaram, Chennai |
| மார்ச் | | |
| ஏப்ரல் | 11.04.2020<br>2-வது சனி | St.Pauls Methodist Church<br>Mumbai |
| மே | 09.05.2020<br>2-வது சனி | Immanuel Church<br>Dharmapuri |
| ஜுன் | 13.06.2020<br>2-வது சனி | Agape Bible Church<br>Bangalore |
| ஜுலை | | |
| ஆகஸ்ட் | 19.09.2020<br>3-வது சனி | Jesus Cares Assembly<br>Anna Nagar, Chennai |
| செப்டம்பர் | | |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

**வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1லட்சம்.**
**ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.**

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
**வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
**VARUKAYIN THOOTHAN,** Newport Street, Nagercoil-629 001.
**Mobile:** 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com

**பத்திரிகை பணி**
A/c. Name : **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : IDIB000N006

**உபவாச ஊழியம்**
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

**முன்னேற்றப்பணி**
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : SYNB0006182

(1-ம் பக்க தொடர்ச்சி)

பரிசைப் பெற முடியும். மாம்சத்தின் கிரியைகளை அழித்து உலக சிந்தை, சிநேகம் ஆகியவற்றை சிலுவையிலறைந்து, நமது இரட்சிப்புக்குத் தடையாயிருக்கும் அனைத்தையும் அகற்றிவிட வேண்டும். நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம். பாரங்களோடு ஓடினால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக அதிகக் கேட்டை நமக்கு உண்டு பண்ணும் பாவத்தை விட்டுவிட வேண்டும். கிறிஸ்தவர்களில் நெருக்கமாகக் காணப்படும் இருபாவங்கள் பெருமையும், அவிசுவாசமுமாகும். கிறிஸ்தவர்கள் என்ற பெயர்ப் பெருமை, ஆவிக்குரிய சாதனைகளின் பெருமை ஆகியவற்றோடு நமது பாவநிலை, தேவ ஞானம், தேவனுடைய இரக்கம் ஆகியவற்றைக் குறித்த அவிசுவாசம் ஆகியவை நம்மில் காணப்படுகின்றன. அவை அதிக பாரமாயிருந்து நாம் வேகமாக முன்னேறிச் செல்லவிடாமல் தடுக்கின்றன. அவற்றை நாம் சுமப்பதையும் சிற்சில வேளைகளில் நாம் அறியாமலிருக்கிறோம். அவை இருதயத்தின் ஆழங்களிலிருந்து கொண்டு வெளிவருவதற்கான வாய்ப்பிற்காகக் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதிக விழிப்புடனிருக்க வேண்டிய பாவங்களிருக்கின்றன. அதாவது நம் அனைவருக்கும் ஒரு பெலவீன பகுதி இருக்கிறது. சாத்தானுக்கு எதிரான பாதுகாவலின் கோட்டையில் மெல்லிய அசையக்கூடிய பகுதி அது. சாத்தானுக்கு இப்பகுதியைத் திறந்து கொடுக்கும் ஒரு சதிகாரன் நமது அருகிலுண்டு. ஞானவான்கள் இப்பெலவீன பகுதிகளைக் கண்டுபிடிக்காமல் இளைப்பாறுவதில்லை. அவர்கள் அதனைக் கண்டு பிடித்து, விழிப்புடனிருந்து, அதனைக் கீழ்ப்படுத்தி சீயோனின் பாதையில் ஓட தடையேற்படாதபடி பார்த்துக் கொள்கிறார்கள். ஒருவரிடம் இச்சை, இன்னொருவரிடம் மதுபானப்பிரியம், முன்கோபம், பொருளாசை, லௌகீகம், சோம்பல் போன்ற ஏதேனும் ஒன்று ஓடுவதற்குத் தடையாயிருக்கலாம். இவற்றில் சத்துருவுக்கு இடமளித்து விழுந்து போகக்கூடாது. தங்கள் சுய நம்பிக்கையால் நாங்கள் தேவனுடைய ஆலயம், அதனால் நாங்கள் விழுந்து போவதில்லை என்று எண்ணக்கூடாது. பழைய ஆதாமின் வேர் அவர்களிலிருந்து சிறிது சிறிதாகத் துளிர்விட்டு, வளர்ந்து, படர்ந்து அவர்கள் இருதயத்தை நிரப்பி விடுகிறது. அவர்களிலிருந்த கிருபை எடுபட்டுப் போய் திடீரென நினையாத நேரத்தில் இடறி தலைகீழாக விழுவார்கள். இப்போது அவர்கள் பின்வாங்கிப் போனவர்களின் கூட்டத்திலிருக்கிறார்கள். அவர்களிலிருந்த ஒரு பெலவீன பகுதியை அவர்கள் உதாசீனம் பண்ணினதே இதற்குக் காரணம்.

> **கிறிஸ்தவ** வாழ்வில் எவ்வளவோ சொகுசுகளை அனுபவிக்கிற நாம் ஆண்டவராகிய இயேசுவின் இடைவிடா **தியாகத்தை** மறந்து அவரது பணியைத் தொடராமலிருக்கிறோம்.

தேவ பிள்ளையே, உன் உள்ளத்தின் நினைவுகளை ஆராய்ந்துபார். தீமையின் விதை அங்கு காணப்படுகிறதா? ஏதேனும் ஒன்றை விருப்பமானது என்று பிடித்து வைத்திருக்கிறாயா? அதை தூரப்படுத்துவதில் கண்டிப்பாயிரு. அதை வேரோடு பிடுங்கி அகற்றி விடு. இல்லாவிட்டால் அது உன் ஓட்டத்தைத் தடுக்கும். பரலோக வாசல், மிகப்பெரிய பாவியையும் ஏற்றுக் கொள்ள அகலமாய்த் திறந்திருக்கிறது. ஆனால் மிகச் சிறிய பாவம் ஒன்றை நீங்கள் வைத்துக் கொண்டிருந்தால் அந்த வாசல் இறுக்கமாக மூடிவிடும்.

**பொறுமையோடு ஓடவேண்டும் :-**

"பொறுமையோடே ஓடக் கடவோம்". உண்மையான ஜீவனுள்ள விசுவாசியிடமுள்ள சாந்தமான திருப்தியின் ஆவி இது. எல்லாம் நன்மைக் கேதுவாகவே நடைபெறுகிது என்ற உறுதி அவர்களிடமுண்டு. இது இன்றியமையாத தேவகிருபை. பந்தய ஓட்டத்தில் நாம் நுழையும்போது சிலுவை சுமக்க நேரிடலாம். பல்வேறு விதமான ஏமாற்றங்கள், சோதனைகள், சோர்புகள் வரலாம். ஆனால் கடைசி மட்டும் பொறுமையைக் காத்துக்கொள்வது அவசியம். நாம் எகிப்திற்குத் திரும்பிச் செல்லக்கூடாது. வாக்குத்தத்த நாட்டைக் குறித்த தவறான செய்திகள் வரலாம். பிரயாணம் நீண்டதாகவும், பாதை வனாந்தரமாகவும் இருக்கலாம். ஆனாலும் தண்டிக்கப்படும்போது ஏலியைப் போல, "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" *1 சாமு.3:18* என்று சொல்ல பொறுமை வேண்டும். மோசேயைப் பாருங்கள்! "........ மோசே தான் பெரியவனான போது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதை தெரிந்து கொண்டு ........ அவன் அதரிசனமானவரை தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து (பொறுமையாயிருந்து) ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான்" *எபி.11:24-27.*

**யோபுவைப் பார்ப்போம் :-**

சாத்தான் அவனைத் துன்புறுத்த தேவன் அனுமதித்தார். "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" யோபு.1:20 என்றான். மேலும் "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" யோபு.2:10 என்று மனைவியிடம் துணிச்சலாகப் பேசினான்.

**தாவீதின் வாழ்வை பாருங்கள்:-**

தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான அவனது வாழ்வில் எத்தனையோ ஆபத்துக்கள் அவன் தலையைக் கடந்து சென்றன! சவுலின் கைக்குத் தப்பி ஓடின நாட்கள் எத்தனை! குடும்பத்தினரால் ஏற்பட்ட துயரங்கள் எண்ணற்றவை. தன் சொந்த மகனைக் கண்டு பயந்து ஓடினபோது ".......... இதோ என் கர்ப்பப் பிறப்பான என் குமாரன் என் பிராணனை வாங்கத் தேடும் போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான்! ....... ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்" *2சாமு.16:11-12.* கர்த்தருக்காகப் பொறுமையாகக் காத்திருக்கும் அனுபவம் ஒரு மேன்மையான கிருபை.

> **ஒருவேளை** கர்த்தர் இந்நிமிடத்தில் ஆரவாரத்தோடு தூதர் தொனி முழங்க மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வருவதாகயிருந்தால் உங்கள் வாழ்வில் அது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாயிருக்குமா! சிந்திப்போம்.

**நமது ஆண்டவராகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள் :-**

*1 பேதுரு 2:21-22, எபி.12:3-6* ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

பொறுமையோடே ஓடாவிட்டால் பரிசினைப் பெற்றுக் கொள்ள முடியாது. புரிந்து கொள்ள முடியாத பல காரியங்கள் நமக்கு இருக்கலாம். மாம்சத்தின் விருப்பம் வேறுவிதமாயிருக்கலாம். ஆனால் கடைசிமட்டும் பொறுமையோடே ஓடினால் நமக்கு எல்லாம் தெளிவாகிவிடும். தேவனுடைய திட்டங்களெல்லாம் நன்மையானவை. **இன்று சிலுவை சுமந்தால் நாளை கிரீடம் பெறலாம்.** இன்று உழைத்த உழைப்பிற்கு நாளை ஊதியம் கிடைக்கும். இன்று விதைத்தால் நாளை அறுப்பது உறுதி. இன்று கடினமாகப் போர் செய்தால் நாளை இளைப்பாறுதலைப் பெறுவோம். இன்று கண்ணீர் சிந்தினால் நாளை களிகூரலாம். **இன்று என்பது ஒரு குறுகிய காலம் மட்டுமே. ஆனால் நாளை என்பது நித்தியமானது.**

**தொடர்ந்து இயேசுவை நோக்குவோம்:-**

இது மிகவும் முக்கியமானது. இயேசுவையே நோக்கி ஓட வேண்டும். சிலுவையில் அவர் சம்பாதித்த பூரண நீதியை சார்ந்து ஓடவேண்டும். நமது இரட்சிப்புக்கு நமது முயற்சி போதுமானதல்ல. முடிவைக் குறித்த நிச்சயமின்மையுடன் ஓடவேண்டாம். உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியைத் தொடர வேண்டும். அவர் நமது துக்கங்களை சுமந்து நமது பாடுகளை ஏற்றுக் கொண்டார். தமது பிதாவுக்கு முன்பாக விரைவில் கறை திரையற்றவர்களாக நம்மை நிறுத்துவார்.

தேவ குமாரனாகிய கிறிஸ்துவே நமது மாதிரி. அவரது சாந்தம், தாழ்மை, அன்பு, ஆத்துமதாகம், சுயஒறுப்பு, பரிசுத்தம், விசுவாசம், பொறுமை, ஜெபவாழ்வு ஆகியவற்றைப் பின்பற்ற முயற்சித்தால் நாமும் அவரைப் போலாக முடியும்.

மேலும் அவரது வருகைக்காக ஜெப சிந்தையோடு விண்ணப்பம் செய்வதால் அவரது வருகையைத்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

துரிதப்படுத்தலாம். தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும். அவருக்காகக் காத்திருக்கிறவர்களுக்காக அவர் பாவமற்றவராக இரண்டாந்தரம் வெளிப்படுவார். அவர்களது பாவ உடல் கண் இமைக்கும் நேரத்தில் மகிமையான உடலாக மாறி அவர்கள் நித்திய காலம் அவரோடு வாழுவார்கள்.

இந்த இயேசுவை நோக்கியே மேகம் போன்ற திரளான சாட்சிகள் இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசித்து முன்னேறினார்கள். பூமியை நோக்க வேண்டாம். அது பாவம் நிறைந்ததும் அழிவுக்கேதுமானதுமாயிருக்கிறது. அதின்மேல் இடப்பட்ட அஸ்திபாரம் நிலையற்றது. அதின்மேல் நம்பிக்கை வைப்பவர்களும் ஏமாற்றமடைவார்கள்.

**உங்களையும் பார்க்க வேண்டாம் :-**

நீங்கள் இயற்கையாகவே பெலவீனரும், தரித்திரரும், குருடரும், நிர்வாணிகளுமாயிருக்கிறீர்கள். உங்கள் கடந்தகால மீறுதல்களுக்கு நீங்கள் பாவநிவிர்த்தி செய்யக்கூடாதவர்கள். கலியாண வஸ்திரத்தை ராஜா கேட்கும் போது நீங்கள் பதிலளிக்க முடியாது. இயேசுவை நோக்கினால் மட்டும் உங்கள் பாவசுமைகள் அகற்றப்பட்டு நல்ல வஸ்திரம் தரிப்பிக்கப்படும்.

உங்களுக்கு முன்னால் சென்றவர்கள் சென்ற பாதையில் பொறுமையோடே ஓடுங்கள். அவர்கள் பாதுகாவலாகச் சென்றதுபோல நீங்களும் பாதுகாவலாகச் செல்ல முடியும். உங்கள் இருதயங்களை சோதித்துப் பாருங்கள். பாரங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தேவ பயத்தோடே ஜெபத்துடன் வேண்டாத பாவங்களை அகற்றி விடுங்கள். இயேசுவை நோக்கிப் பார்த்த போது பேதுரு சிறிது நேரம் கடலின்மேல் நடந்தான். ஆனால் அவன் அலைகளையும், புயலையும் பார்த்த போது பயந்து அமிழத் தொடங்கினான். **நாமும் கண்களை இயேசுவை விட்டு அகற்றும் போது சாத்தானுக்கு இடங் கொடுக்கிறோம். ஆத்துமா மூழ்க ஆரம்பிக்கிறது.**

கிறிஸ்துவின் மேல் கண்களைப் பதித்து நாம் முன்னேறினால் தீயும், தண்ணீரும் நம்மை சேதப்படுத்தாது. எந்த சூழ்நிலையிலும் இயேசுவை மட்டும் நோக்குங்கள். எனது காயங்களை நானே ஆற்றிக்கொண்டு பின்பு அவரை நோக்குவேன் என்கிறீர்களா? அது சாத்தானின் எண்ணம். பெலவீனத்திலும் பெலனுள்ளபோதும், பள்ளத்தாக்கிலும், குன்றிலும், சுகத்திலும், சுகவீனத்திலும், துன்பத்திலும், இன்பத்திலும், வாலிபத்திலும், வயோதிபத்திலும், ஐசுவரியத்திலும், தரித்திரத்திலும், வாழ்விலும், சாவிலும் உள்ளே வரும்போதும், வெளியே செல்லும்போதும் இயேசுவையே நோக்கிப் பார்ப்போம்.

**பரலோக** வாசல், மிகப்பெரிய பாவியையும் ஏற்றுக் கொள்ள அகலமாய்த் திறந்திருக்கிறது. ஆனால் மிகச் சிறிய **பாவம்** ஒன்றை நீங்கள் வைத்துக் கொண்டிருந்தால் அந்த வாசல் இறுக்கமாக மூடிவிடும்.

# மாற்றங்களை ஏற்படுத்தியது யார்?
## Who changed things?

Michael L. Brown

"வாழ்வானாலும், சாவானாலும்" என்ற திட விசுவாசத்துடனும், உற்சாகமான ஆவியால் நிரப்பப்பட்ட வல்லமையுடனும் வாழ்ந்த புதிய ஏற்பாட்டின் சபையின் நிலையை இன்று ஓய்வுநாள் காலை மார்க்கமாக மாற்றியது யார்?

லூக்.14:33-ல் கூறப்பட்ட 'எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்' என்பதை மாற்றிவிட்டு, 'இந்த சுருக்க ஜெபம் உங்களை நித்தியத்தில் சேர்க்கும்' என்று மாற்றியமைத்தது யார்?

2 தீமோ.3:12-ன் படி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்பதை விட்டுவிட்டு, 'இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டால் சொகுசாக வாழலாம்' என ஏமாற்றியது யார்?

விளைவுகளை பாராமல் பயமின்றி சத்தியத்தைப் பிரசங்கிப்பதற்குப் பதிலாக யாருக்கோ பயந்து கலப்படமான சுவிசேஷத்தை அளிக்கத் தூண்டியது யார்?

அப்போஸ்தலர் காலத்தின் விசுவாசத்திலிருந்து எந்த வெளிப்படுத்தல் மூலமாக விலகிச் சென்றோம்.

புதிய ஏற்பாட்டின்படி ஆவியின் அபிஷேகமின்றி சீஷர்கள் ஊழியம் செய்யவில்லை. ஆனால் ஊழியங்களில் ஆவியானவர் வெளிப்படவில்லையே. இந்த மாற்றத்தை நுழைத்தது யார்?

"இன்றைய சபைகளிலிருந்து ஆவியானவர் எடுக்கப்பட்டுவிட்டாலும் 95% பணிகள் இதுபோலவே தொடரும். அந்த வேறுபாட்டினை அறியவே முடியாது. ஆனால் ஆதித்திருச்சபையிலிருந்து தூய ஆவியானவர் எடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் பணியில் 95% நின்றிருக்கும். அனைவரும் அந்த வேறுபாட்டினைப் புரிந்திருப்பார்கள்" என்று A.W.Tozer கூறியது உண்மை.

தேவனை மையமாகக் கொண்ட விசுவாசத்தை மனிதனை மையமாகக் கொண்ட விசுவாசமாக மாற்றியது யார்? 'தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுக்கவேண்டும்' என்பதை 'சிலுவையை தவிர்த்து, உன்னை நீயே பலப்படுத்திக்கொள்' என்று மாற்றம் செய்தது யார்?

பரிசுத்தம் என்பது அழகு என்பதை மாற்றி அது அடிமைத்தனம் என வேறுபடுத்தியது யார்? அந்தகார சக்திகளுக்கு தேவபிள்ளைகள் எதிர் என்பதனை தேவ பிள்ளைகள் அத்தகைய அந்தகார வல்லமைகளுக்குப் பங்காளிகள் என்ற மாற்றத்தை ஏற்படுத்தியது யார்?

ஆதித் திருச்சபையின் கொரிந்தியருக்குப் போதனை கொடுத்த பவுல் அவர்கள் பாவத்தில் வாழ்ந்த மக்களிடமிருந்து பிரிந்து வாழச் சொன்னார் (1 கொரி.5-ம் அதிகாரம்) ஆனால் இன்று மனந்திரும்பாத மக்கள் சபைகளை நடத்தி, பீடங்களில் நின்று பிரசங்கிக்கிறார்களே, இந்த மாற்றம் எப்படி வந்தது?

மத்.5:10-12, அப்.5:41, பிலி.1:29 ஆகிய வசனங்களின்படி ஆண்டவராகிய இயேசுவின் வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை மக்களில் ஏற்படுத்திய தாக்கத்தால், அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் வரும் பாடுகளுக்குத் தங்களை ஒப்புக் கொடுப்பது ஒரு சிலாக்கியம் என எண்ணச் செய்தது. ஆனால் இன்றோ இரட்சிப்பு ஆதாயத்திற்காக விற்கப்படுகிறது. நாம் வேத வாக்கியங்களை விட்டுவிட்டு தற்கால உபதேசங்களுக்கு இடமளித்துவிட்டோம்.

பல்வேறு சபைப் பிரிவினரை நாம் குற்றப்படுத்தலாம். நமது சபைப் பிரிவினைக் குறித்து பெருமையான காரியங்களைப் பேசலாம். ஆனால் வேதவசனங்களை விசுவாசித்து அதன்படி நடக்காவிட்டால் நமது கிறிஸ்தவம் பயனற்றது.

தேவன் நமது அழகிய பிரசங்கங்களையும், நேர்த்தியான ஆராதனைகளையும் எதிர்பார்க்கவில்லை. நாம் இயேசுவின் நாமத்தின் வல்லமையாலும் தேவ வசனத்தின் ஞானத்தாலும், பரிசுத்த ஆவியின் நிறைவாலும் நடத்தப்பட வேண்டும். அப்போஸ்தலர் கால மாதிரியைப் பின்பற்றி தைரியத்தோடும், தேவையை உணர்ந்து செயல் படுகிறவர்களாகவும் வாழ வேண்டும். தேவ வசனத்தை வாஞ்சையோடு தேட வேண்டும்.

**காலமாயிற்று**

தேவனது திட்டத்தின்படி சபை செயல்படவில்லை. அது தேவவசனத்திற்கு எதிராகவும், சபை சரித்திரத்திற்கு மாறுபட்டதாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆவியானவரின் கிரியை சபைகளில் இல்லை. நாம் இன்னும் ஆழமான அனுபவத்திற்குள் செல்ல வேண்டும்.

**இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும்**

இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் நிச்சயமானால் நாம் செய்ய வேண்டியது இன்னும் அதிகம். ஆவியானவர் ஊற்றப்படுவது உண்மையானால் அது இன்னும் அதிகமாக ஊற்றப்பட வேண்டும். தேவ வசனத்தை நமது அனுபவம், அர்ப்பணம் ஆகியவற்றின் நிலைக்கு கொண்டுவர முயற்சிக்காமல், நமது வழிகளை வசனத்திற்கேற்றபடி கொண்டுவர முயற்சிப்போம். அவர் வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொண்டு அவரது கிருபையால் அவரது அழைப்புக்குக் கீழ்ப்படிவோம்.

**சரியான நிலை எது?**

Leonard Ravenhill என்பவர், "கிறிஸ்தவன் இன்று சரியான நிலையை விட தரந்தாழ்ந்திருப்பதால், ஒருவர் ஆதித் திருச்சபையின் கிறிஸ்தவனாக செயல்பட ஆரம்பிக்கும்போது, 'அவர் நிலை சரியல்ல' (மனநிலை பாதிக்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

பட்டவர்) என்று எண்ணப்படுகிறார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

'தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல ..... தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பாற்றுவான்' மத்.10:37-39 என்று இயேசு கூறினார். 1 கொரி.11:1 மற்றும் பிலி.4:9 ஆகிய வசனங் களில் பவுல் தமது மாதிரியைப் பின்பற்றும்படி கூறியிருக்கிறார் பிலி.1:20-21.

நாம் அக்கினி போல் பற்றி எரிய வேண்டிய காலம் இது. ஆவியில் அனலாயிருக்க வேண்டும் ரோமர் 12:11. அப்பொழுதுதான் நாம் மற்றவர்களைப் பற்றி எரியச் செய்ய முடியும்.

மற்றவர்கள் நம்மை பைத்தியக்காரர் என்றும், மார்க்கவெறி கொண்டவர்கள் என்றும் ஒதுக்கலாம். நாம் தாழ்மையாக நடந்துகொள்ள வேண்டும். சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து அதிகாரத்திலிருப்போரை கனம்பண்ணி, ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் தேவன் நல்லவர் என்பதை நமது கனியால் நிரூபிக்க முடியும். ஜனங்கள் நம்மிடம் வந்து, "உங்களிலிருப்பவர் எங்களுக்கும் வேண்டும் என்றும், வாழ்வில் தேவனை இன்னும் அதிகமாக அனுபவிப்பது எப்படி?" என்று கேட்பார்கள்.

**நமது தகுதியான பதில்**

மிஷனெறி C.T.ஸ்டட் ஒருமுறை இப்படிக் கூறினார்: "இயேசு கிறிஸ்து தேவனாயிருந்தும் எனக்காக அவர் மரித்திருந்தால், அவருக்காக நான் செலுத்தக் கூடிய எந்த ஒரு தியாகமும் எனக்குப் பெரிதல்ல". நாம் இப்படிக் கூறுவோமா?

தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினராக நம்மை சொந்தமாக்கிக் கொள்ள தேவகுமாரன் தமது இரத்தத்தை சிந்தி நமது பாவங்களுக்காக மரித்தார். அவருடைய பிதா இப்போது நமது பிதா. நாம் அனைவரும் சகோதர சகோதரிகளும் அவருடைய சுதந்தர வாளிகளுமாயிருக்கிறோம் ரோமர் 8:14-17. நமது வாழ்வின் மூலம் இந்த சத்தியத்தை வெளிப்படுத்த வேண்டும். அவரது தெய்வீக அன்புக்கு எல்லா விதத்திலும் நாம் கடனாளிகள்.

அற்புதமான சிலுவையையும், அதன் அழைப்பையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சிலுவையின் மூலம் நம்மை இரட்சித்த இரட்சகரைப் பின்பற்ற எல்லாவற்றையும் விட்டு விட்டால் நாம் முன் செல்ல நமது பாதையில் நம்மை பலப்படுத்துவார். "தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?" ரோமர் 8:32.

**நாம்** செல்ல வேண்டிய தூரம் அதிகம். பாரங்களோடு ஓடினால் **நித்திய** ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது.

**இந்த மகத்தான சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறோமா?**

'என்னைப் பின்பற்றுங்கள்' என்ற இயேசுவுக்கு நம்மையும் நமக்குள்ளவைகளையும் சொந்தமாக்குவோமா? அவர் சித்தம் செய்ய வாழுவோமா? நமது கண்கள் அவரையே நோக்கட்டும். நமது நோக்கம் அவரை அறிவதும், அவரை அறிவிப்பதுமாயிருக்கட்டும். அதற்கான எந்த விளைவுகளையும் சந்திப்போம்.

**என்னைப் பின்பற்றுங்கள்**

"பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்" 2 கொரி.5:15.

"நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" கொலோ.3:1-2.

"........ இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத் தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" 1 பேதுரு 4:2.

கிருபையைப் பெற்றுக்கொண்ட நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவரது கிருபையால் நாம் அவருக்கு முற்றிலும் சொந்தம். எனவே, "நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" ரோமர்.12:1.

எனவே கவனச் சிதறல்களை சிலுவையிலறைவோம். பாவத்திற்கு மரித்து தேவனுக்காகப் பிழைத்திருப்போம். தேவ ஆவியானவர் நம்மில் புதிய கிருபையை நடப்பிக்கட்டும். தேவ மனிதனான மூடி பக்தனில் காணப்பட்ட அக்கினி நம்மில் பற்றி எரியட்டும். ஹென்றி வார்லே என்ற எழுப்புதலாளர் அவரைப் பார்த்து 'மூடி அவர்களே, தன்னை முற்றிலுமாக தேவனுக்கு அர்ப்பணித்த ஒருவரைக் கொண்டு தேவன் என்ன செய்வார் என்பதை உலகம் காண வேண்டும்' என்றார்.

தேசம் தேவன் செய்யும் பெரிய காரியங்களைக் கண்டுகொள்ள நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டாமா? சுவிசேஷம் இத்தலைமுறைக்கு அறிவிக்கப்பட இன்னும் சமயம் ஆகவில்லையா? தேவனுடைய பார்வையில் சரியானதைச் செய்வோம். தேவனுடைய கிருபையும் வல்லமையும் நம்மைத் தாங்குவதாக.

# ஜெயங்கொள்ளுகிறவர்கள்

## *Overcomers*

W.C.Moore (1890-1980)

"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்திலே என்னோடேகூட உட்காரும்படி அருள் செய்வேன்" வெளி.3:21. மேலும் 2:7,11,17, 26,28; 3:5,12,21 ஆகிய வசனங்களிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கான வாக்குத்தத்தங்கள் அருளப்பட்டுள்ளன.

ஜெயங்கொள்ளுவது கூடுமானது என்றும் அதற்குரிய பரிசு உண்டென்றும் வேதபுத்தகம் அழுத்து வதால் நாம் ஜெயங்கொள்ள வேண்டி யவைகள் உண்டென்றும் அதற்காக நம்மை விழிப்படையச்செய்வது மிக அவசியம். எனவே சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டு (எபேசி.6:11) மிகுந்த ஆத்தும உறுதியோடு இலக்கைத் தொடர்வது தேவனுடைய எதிர்பார்ப்பு பிலி.3:12-14.

பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" 1கொரி.9:24-25.

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், அதுக்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்

மேற்கொள்ளப்படுவதைவிட மேற்கொள்ளுவது எத்தனை ஆசீர்வாதமானது!

எபி.12:1-2 படிக்க

**நீங்கள் ஜெயித்தீர்கள்**

"..... வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதுகிறேன்" 1 யோவான் 2:14.

ஜெயங்கொள்ளுகிறவர்களில் தேவவசனம் நிலைத்திருக்கிறது. மேற்கூறிய வாலிபரின் கூட்டத்தில் நாமிருக்க வேதவசன உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவது அவசியம்.

நாம் உண்மையாக ஜெயங்கொள்ளுகிறவர்களும் ........ கிறிஸ்துவின் சிங்காசனத்தில் உட்காருகிறவர்களுமாயிருக்க (வெளி.3:21) அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிவதும் அவர் தரும் ஒளியில் நடப்பதும் அவசியம். மாற்கு 1:15-ல் கூறப்பட்டது போல மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிக்க

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

வேண்டும். இரட்சிக்கப்பட்டால் மட்டும் போதாது, ஆவியால் நிரப்பப்படுவதும் அவசியம் எபேசி.5:18. ஒரு முறை நிரப்பப்படுவதில் நின்று விடக் கூடாது. நிரப்பப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். கலா.5:6-ன் படி நாம் ஆவிக் கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும்.

### கர்த்தருக்கு காத்திருங்கள்

எபேசி.6:10-ன் படி நாம் கர்த்த ரிலும் அவருடைய சத்துவத்தின் வல்ல மையிலும் பலப்பட வேண்டும். நமது சொந்த பெலன், உறுதி, விடாமுயற்சி யோடு முழுமனதோடு பிரயாசப்பட வேண்டும் எரே.29:13. எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருக்குக் காத்திருக்க வேண் டும். அப்போது நமது பெலத்தோடு தேவ பெலனும் இணைந்து விடுவதால் நாம் புதுபெலனடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்பலாம். அப்போது ஓடினாலும் இளைப்படைய மாட்டோம், நடந்தாலும் சோர்ந்து போகமாட்டோம் ஏசா.40:29-31.

உத்தம இருதயத்தோடும், விசு வாசத்தோடும் காத்திருக்க வேண்டும். எபி.11:6, லூக்.11:1-13 வசனங்களில் படிப்பதுபோல வருந்தி கேட்க வேண்டும். "கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இரு தயத்தை ஸ்திரப்படுத்துவார், திட மனதா யிருந்து கர்த்தருக்கே காத்திரு" சங்.27:14.

கர்த்தருக்குக் காத்திருப்போர் அதற்காக சமயத்தை ஒதுக்க வேண்டும். அதிகக் குளிரான காலத்தில் வெளியே யிருந்து வருகிற நாம் நெருப்புக்கு முன்னால் உட்கார்ந்து வெப்பம் உடலில் ஊடுருவி நம்மை இதப்படுத்தும்வரை காத்திருப்பது போல, தேவ அக்கினி நம்மில் ஊடுருவி பரவிச் செல்லும் வரை காத்திருக்க வேண்டும்.

### வேத வசனத்தில் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்

இரவும் பகலும் வேதத்தை தியானிக்க வேண்டும் சங்.1:2. மின்னேற்றி மின்கலத்தோடு இணைக்கப் பட்டு சிறிது நேரம் காத்திருக்கும்போது அது மின் னூட்டம் பெற்ற தொடர்புள்ள கருவி பயன்படுத்தப்படும். நமது தேய்ந்து, களைத்துப் போன ஆவிக்குரிய வலிமை உறுதியடைய காத்திருக்க வேண்டும்.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாத வனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணு கிறார் ஏசா.40:29. எனவே அவர் நம்மை பெலப்படுத்தும் வரை பொறுமையோடு காத்திருப்போம்.

நாம் பரிசுத்தப்படுத்தப்பட்டிருந் தாலும் ஆவியால் நிரப்பப்பட்டிருந்தா லும் விழிப்புடனிருப்பது மிக அவசியம். எனவே நமது ஆண்டவர், "....... எப் பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங் கள் என்றார்" லூக்.21:36.

### தேவன் மட்டுமே நம்மை நிலைநிறுத்த முடியும்

உபா.8:10-14 வசனங்களில் உலக ஆசீர்வாதங்களால் நிறைந்த மக்கள் தேவனை மறந்துவிடும் அபாயம் எச்சரிக் கப்பட்டுள்ளது. அதுபோல இன்று ஆவிக் குரிய ஆசீர்வாதங்களால் நிறைந்த மக்கள் தேவனை மறக்கக்கூடிய அபாயம் இருக்கிறது.

தேவனை முழுமனதோடு விசு வாசிக்கிற மக்களுக்கு அவர் ஆசீர்வாதங் கள், அனுபவங்கள் ஆகியவற்றிற்காக தேவனைத் துதிப்போம். ஆனால் இவை களை மட்டும் நாம் சார்ந்து வாழக் கூடாது. இரட்சிப்புக்கு ஏதுவான விசுவா சத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தி னாலே காக்கப்பட வேண்டும் 1 பேதுரு 1:5.

'அவர் ஒருவரே நம்மை வழுவாத படி காக்கிறவர்' யூதா.1:24. நாம் தேவனை விட்டுவிட்டு சுயாதீனமாக வாழுவதை அவர் விரும்புவதில்லை. 'தன்னை நிற்கிற வன் என்று எண்ணுகிறவன் விழாத படிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்' 1 கொரி.10:12. அதோடு அவருடைய வாக்கு: "தேவன் உண்மையுள்ளவரா யிருக்கிறார்.......சோதனையைத் தாங்கத் தக்கதாக சோதனையோடு கூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கை யும் உண்டாக்குவார்" 1 கொரி. 10:13.

அமைதியாக உட்கார்ந்து காத்தி ருங்கள். அவரை நேசிப்பதை எடுத்துக் கூறுங்கள். உங்கள் இருதயத்தை அவ ருக்கு முன்பாக ஊற்றிவிடுங்கள் சங்.62:8. உங்கள் எண்ணத்தாலும், வார்த்தை களாலும், செயல்களாலும் அவரை வேதனைப்படுத்தியிருந்தால் அதற்கு மன்னிப்பைக் கோருங்கள்.

நாம் வளர்ச்சியடைந்துவிட் டோம் என்ற எண்ணம் கூடாது. மிகவும் நெருக்கமான சீஷர்களிடம்தான் இயேசு, 'நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது' என்றார் மத்.26:41.

நாம் இப்போது வாழும் காலம் ஆபத்து நிறைந்தது. விழிப்பும், பொறு மையும் இன்றியமையாதவை. வெற்றி வாழ்க்கையின் சாட்சியில் விழிப்புடன் ஜெபிக்காவிட்டால், சிம்சோனைப் போல கர்த்தர் அவனை விட்டு விலகின தை அறியாத நிலை ஏற்படும் நியா.16:20.

பிறரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கலாகாது 2 கொரி.10:12. தேவ வசனத்தோடும், தேவனுடைய பரிசுத்த மான வாழ்வு நிலையோடும் நெருங்கிய உறவு வேண்டும்.

நமது பழைய ஆசீர்வாதங்கள், அனுபவங்கள் போன்றவற்றில் புரள வேண்டாம். கர்த்தர் செய்த உபகாரங் களையும் மறக்க கூடாது சங்.103:2. நன்றி யுள்ள ஆவியுடனும் ஜாக்கிரதையுடனும் வாழ வேண்டும் பிலி.3:12,14 படிக்க.

தோல்வி ஏற்படும்போது அதனை அறிக்கை செய்து, மன்னிப்பை பெற வேண்டும்.

### உண்மைகளை சந்திக்க வேண்டும்

சார்லஸ் ஃபின்னி இரட்சிக்கப் பட்டு, தூய ஆவியால் நிரப்பப்பட்டு, சுவிசேஷ பணியில் தேவனால் வல்லமை யாக பயன்படுத்தப்பட்டார். ஆயினும் சில வேளைகளில் தன்னில் ஆவியின் நிறைவு குறைவுபடுவதை உணர்ந்தார். அப்படிப்பட்ட வேளைகளில் அவர் துணிந்து செயல்படாமல் குறையை உணர்ந்தார். தூய ஆவியானவர் மறுபடி யும் தன் மூலமாக செயல்பட கர்த்தரை தேடினார். தேவ பிரசன்னமின்றி தம்மால் வாழ முடியவில்லை என்று அவர் குறிப் பிட்டுள்ளார். "....... பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்கிறார்கள்."

உண்மையான ஆவியின் வாழ்வு வெதுவெதுப்பான நிலைக்கு இட மளிப் பதில்லை. வெதுவெதுப்பான நிலை ஏற்பட ஆரம்பித்தால் விழிப்படைய வேண்டும். தேவனிடமிருந்து புதிய அபிஷேகத்தையும், புதிய நிரப்புதலை யும் பெற வேண்டும் சங்.92:10.

இயேசு ஜெயம் பெற்றார். நாமும் ஜெயங்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்று வோம் வெளி.3:21 படிக்க.

ஜெயங்கொண்டவர்களுக்கு தேவன் அளித்த அற்புதமான வாக்குத் தத்தங்களுண்டு. ".......... அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர் களும், தெரிந்து கொள்ளப்பட்டவர் களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கி றார்கள்" வெளி.17:14.

## ஜார்ஜ் முல்லரின் விசுவாச வாழ்வு - பகுதி-2
## George Muller's Life of Trust - Part-2

ஒரு நாள் மாலை வேளையில் முல்லர் வேதபுத்தகத்தை வாசித்தபோது, 'உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்' சங்.81:10 என்ற வசனம் அவர் உள்ளத்தை கவர்ந்தது. இந்த வசனத்தைத் தாம் நிறுவிய காப்பகத்தில் பயன்படுத்த ஏவப்பட்டார். காப்பகத் திற்கான வாடகை இடத்திற்கு 1000 பவுண்ட்களையும், அதனை நிர்வகிக்கத் தகுதியான ஒரு நபரையும் கர்த்தரிடத் தில் கேட்டார். இரண்டு நாட்களுக்குள் முதல் ஷில்லிங் கிடைத்தது. நண்பர்கள் வீட்டு உபயோகப் பொருட்கள், ஆடைகள், படுக்கை போன்றவற்றை இலவசமாக அளித்தனர். தகுதியான ஒரு வீடும் வாடகைக்குக் கிடைத்தது. நன்கொடையாகப் பணமும் வந்தது. ஆனால் 1000 பவுண்ட் சேர்வதற்கு 18 மாதங்கள் தினந்தோறும் ஜெபிக்க வேண்டியதாயிருந்தது.

ஒரு ஏழை சகோதரி தன் பலவீனத்திலும் தையல் மூலம் 100 பவுண்ட் தியாகமான நன்கொடையாக அனுப்பினார்கள். இவ்வளவு தொகை அவளால் எப்படிக் கொடுக்க முடிந்தது என்று கேட்டபோது, 'ஆண்டவராகிய இயேசு தமது கடைசிச் சொட்டு இரத்தத் தையும் எனக்காகக் கொடுத்தார். அவருக்காக நான் 100 பவுண்ட் கொடுக்க வேண்டாமா' என்றார்கள்.

குழந்தைகள் காப்பகத்திற்கான ஒவ்வொரு நுணுக்கமான காரியங்களுக் காகவும், தேவைகளுக்காகவும் ஜெபித்து

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

பெற்றுக்கொண்ட முல்லர் இதுவரை சேர்க்க வேண்டிய பிள்ளைகளுக்காக ஜெபிக்கவில்லை. காப்பகத்தைத் திறப்ப தற்கான வேளை வந்தபோது பிள்ளை களிடமிருந்து ஒரு விண்ணப்பம் கூட வரவில்லை. எனவே முல்லர் அதற்காக உத்தமத்தோடு ஜெபித்தார். மறுநாள் முதல் விண்ணப்பம் வந்தது. நான்கு வயதிலிருந்து பன்னிரெண்டு வயது டைய சிறுவர்களால் விரைவில் காப்பகம் நிரம்பியது. இப்போது பாலகர்களுக்காக ஒரு இல்லம் திறக்க ஏவப்பட்டார்.

ஒன்றரை ஆண்டுகளுக்குள் மூன்றாவது காப்பகம் திறக்கப்பட்டது. அதில் ஏழு முதல் 12 வயது வரையுள்ள சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதற்கு முந்திய இரு காப்பகங்கள் இருந்த தெருவிலேயே இதற்கும் வீடு கிடைத்தது. ஒவ்வொரு நாளும் 90 பிள்ளைகளையும், பணியாளர்களையும் போஷிக்க வேண்டியதாயிருந்தது. சிறு வர்களின் எண்ணிக்கையும், பொறுப்பும் அதிகரிக்க அதிகரிக்க முல்லர் தன்னை அதிகமாக ஜெபத்தில் ஈடுபடுத்தினார். எசே.36:37-ன் படி தேவன் அனுக்கிரகம் செய்யும்படி அவர் விண்ணப்பம் செய் தார். தனது மனைவி மற்றும் மிக நெருக்க மான உடன் பணியாளர் ஒருவரிடமும் மட்டுமே பொருளாதாரத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டு ஜெபித்து வந்தார்.

### விசுவாசம் சோதிக்கப்பட்டது

முதல் ஆண்டிலேயே பல பொரு ளாதார சோதனைகள் ஏற்பட்டன. ஒருமுறை பண நெருக்கடியின்போது அவர் இரு விசேஷ ஜெபக் கூடுகைகளை நடத்தினார். அனைத்து பணியாளர் களும் அழைக்கப்பட்டு மாலை 6 முதல் 9 மணி வரை ஜெபித்தனர். ஆனாலும் பொருளாதார நெருக்கடியைக் குறித்து அவர் தெரியப்படுத்தவில்லை. தேவன் எவ்வளவு திரளாக தேவைகளை சந்திக் கிறவர் என்று அவர் கூடுகையில் பேசினார்.

இத்தகைய ஒரு இக்கட்டான நாளில் அவர் எபி.13:8-ல் "இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர்" என்பதை வாசித்து தியானித்துக் கொண்டிருந்தார். "இதுவரை இயேசு அவரது அன்பு, வல்லமை ஆகியவற்றால் காப்பகத்தின் தேவைகளை சந்தித்திருக் கிறார். இதுபோல வரும் நாட்களிலும் தேவைகளைப் பூர்த்தி செய்வார்" என்று எனக்குள்ளே பேச நடத்தப்பட்டேன். என் உள்ளத்தில் சந்தோஷம் பொங்கி வழிந்தது. திடீரென ஒருவர் 20 பவுண்ட்களை என்னிடம் கொடுத்தார் என்று அவர் எழுதியிருக்கிறார்.

பொருளாதார நெருக்கடி தொடர்ந்த போது, "என் ஆண்டவர் தமது ஞானம் அன்பு ஆகியவற்றில் நிகரற்றவர். ஆயினும் இன்னும் உதவி வரவில்லை. எப்போது உதவி வரும் என்பது எனது கவலையல்ல, தேவன் ஏற்றவேளையில் உதவியை அனுப்புவார். ....... இது எனக்கு மிகுந்த சோதனையின் வேளையாயிருந்தாலும், அவரது உதவிக் காக அவரைத் துதிப்பேன்" என்றும் எழுதினார். சில நாட்களுக்குப் பின்பு "ஆண்டவர் இரக்கமாக அனுதின தேவைகளை சந்தித்தார். ஆனால் அவற்றை தேவையான வேளையில் தந்தார்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடிகள் தொடர்ந்த போது தேவன் முல்லரின் சமாதானத்தைக் காத்துக்கொண்டார். அவரது ஜெபத்தின் பலனைக் கொடுத்து தேவன் அவரை உற்சாகமூட்டினார். அனைத்து ஊழியர் களும் கூட்டப்பட்டு அவர்களோடு தேவைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஆயினும் கடன் வாங்கி எதையும் செய்யக்கூடாது என்பதில் அவர் உறுதி யாயிருந்தார். ஊழியர்களில் சிலர் தங்களிடமிருந்த பொருட்களை கொடுத்தனர். இன்னும் சிலர் தங்களிட மிருந்த புத்தகங்கள் போன்றவற்றை விற்றுக் கிடைத்த பணத்தைக் கொடுத்தனர்.

### தேவனுடைய தொடர் உத்தமம்

ஒருநாள் தங்களால் விற்கக்கூடிய ஏதேனும் பொருட்கள் என்று ஆலோ சித்துக் கொண்டிருந்தார். அப்போது லண்டனிலிருந்து வந்த ஒரு பெண்மணி அடுத்த நாளின் தேவைக்குரிய பணத்தைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தாள். அவள் தற்போது அருகில் வசித்துக் கொண்டிருந்தாள். பல நாட் களாக உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கிருந்தது. இந்த சம்பவத்தினைக் குறித்து முல்லர் : "இந்தப் பணம் காப்பகத்திற்கு மிக அருகில் பலகாலம் கொடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தி லிருந்தே தேவன் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருந்தார் என்பதற்கு இது ஒரு எளிய நிரூபணம். ஆனால் அவர் தமது பிள்ளைகளின் ஜெபத்தில் பிரியப்படுவதால் நீண்டகாலம் ஜெபிக்கச் செய்திருக்கிறார். இதனால் நமது விசுவாசம் சோதிக்கப்படவும் கிடைத்த பதில் இன்னும் அதிக இனிமையாகவும் ஏதுவாயிற்று. அன்றியும் இது ஒரு விலையேறப்பெற்ற விடுதலை. இந்தப் பணத்தைப் பெற்ற பின்பு எப்போது தனியாயிருக்கும் வாய்ப்பினைப் பெற் றேனோ, உடனேயே சத்தமாக துதி களையும் நன்றிகளையும் ஏறெடுத்தேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சிறுவர் காப்பகத்தின் தேவைகள் அதிகரித்தது. உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துவிட்டது. சமுதாயத்தில் ஏழை விதவைகள் துன்புற்றனர். அவர்களும் பராமரிக்கப்பட முல்லர் ஜெபித்தார். இந்த உதவிக்காக ஒரு சகோதரன் பெருந்தொகையை நன் கொடையாக அளித்தார். உணவுப் பொருட்களின் விலை சீராகும் வரை அத்தொகை பேருதவியாக இருந்தது.

**சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து அதிகாரத் திலிருப்போரை கனம்பண்ணி, ஆண்ட வருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் தேவன் நல்லவர் என்பதை நமது கனியால் நிரூபிக்க முடியும். ஜனங்கள் நம்மிடம் வந்து, உங்களி லிருப்பவர் எங்களுக்கும் வேண்டும் என்றும், வாழ்வில் தேவனை இன்னும் அதிகமாக அனுபவிப்பது எப்படி? என்று கேட்பார்கள்.**

தன் கைகளால் கடினமாக உழைத்து ஜீவனம் நடத்திய ஒரு பெண் தனது வங்கி சேமிப்பு முழுவதையும் முல்லர் செய்த நற்பணிகளுக்காகக் கொடுத்துவிட்டாள். அவளுடைய இருதயத்தைத் தொட்ட வசனங்கள், "உங்களுக்கு உள்ளவைகளை விற்று பிச்சை கொடுங்கள்" லூக்.12:33. "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங் களை சேர்த்து வைக்க வேண்டாம்" மத்.6:19 என்பவைகள்

முல்லரின் அனுதின குறிப்பு ஏட்டில், "இன்று நாங்கள் ஏழைகள், கர்த்தர் எங்கள் விசுவாசத்தை சோதித்த பின்பு அவரது இதயபூர்வ அன்பினால் திரளாகத் தந்து கொண்டிருக்கிறார். அவர் தமது நாம மகிமைக்காகவே இதைச் செய்கிறார். எங்கள் விசுவாச பரீட்சைக் காக அவர் எங்களைத் தரித்திரராயிருக்க இடமளித்தார்" என்றும் எழுதியிருக் கிறார்.

இன்னொரு நெருக்கடி காலத்தில் ஒரு ஜெர்மன் மிஷனெறி தமக்குரிய பொருட்கள் யாவையும் அளித்து உதவி யிருக்கிறார். இன்னொரு பெண் தனது பொருட்களை விற்று பணமாகக் கொடுக்க விரும்பியும் அவளது உடல் நலக்குறைவால் தாமதம் ஏற்படுவதா யிருந்தது. ஆனால் தேவ ஆவியானவர் பலமாக அவள் இருதயத்தில் பேசினபடி யால் அவளால் தாமதிக்க முடியவில்லை. தேவை ஏற்பட்ட சரியான வேளையில் அவள் தனது உதவியைச் செய்தாள்.

ஒருமுறை ஒரு சகோதரன் தனது பணிக்காக சென்று கொண்டிருந்த போது காப்பகத்திற்கு உதவி செய்யத் தூண்டப் பட்டார். வேலையிலிருந்து திரும்பி வரும்போது உதவி செய்யலாமே என்று எண்ணினார். ஆனால் ஆவியானவர் அவரை பலமாக நெருக்கினபடியால் உடனே காப்பகத்திற்கு உதவியோடு வந்தார். அன்று காலை அவர் உதவி செய்திராவிட்டால் பிள்ளைகள் குடிக்கப் பால் குறைவுபட்டிருக்கும்.

சில நாட்கள் தேவையின் அவசரத்தால் பணியாளர்கள் அதிகம் நெருக்கப்படுவார்கள். ஆனால் தேவன் ஒருபோதும் கைவிட்டதில்லை. கடைசி நேரத்தில் பெறப்பட்ட உதவிகளால், "உண்மையாகவே ஏழைகளாகவும், சோதிக்கப்படுகிறவர்களாகவும் இருப்பது இரக்கமுள்ள பிதாவின் கரிசனைக்கு விலையேறப்பெற்ற நிரூபணமாயிருக் கிறது" என்று அவர் எழுதியிருக்கிறார். "தம்முடைய சொந்த குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் அருளாதிருப்பது எப்படி?" ரோமர் 8:32.

"இந்தப் பதினேழு மாதங்களில் ஏற்பட்ட விசுவாச சோதனைகள் நீண்டு கொண்டே சென்றன. அவை முந்திய காலங்களை விடக் கூரியவைகளாயிருந் தன. எனினும் காப்பக சிறுவர்களுக்குத் தேவையான உணவு, உடை ஆகியவற்றில் எந்தத் தாழ்ச்சியும் ஏற்படவில்லை" என்று முல்லர் எழுதியிருக்கிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

மூன்று காப்பகங்களை நடத்துவதில் ஏற்பட்ட சோதனைகளின் மத்தியில் நான்காவது இல்லத்தைத் திறக்க வேண்டும் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. அதே தெருவில் நான்காவது இல்லம் ஆச்சரியமாகத் திறக்கப்பட்டு சிறுவர்கள் இன்னும் அதிகமாக சேர்க்கப்பட்டனர்.

அவரது தந்தையும் சகோதரனும் இரட்சிக்கப்படாமலே மரித்தனர். அது முல்லரது இருதயத்தை நொறுக்கிய விசுவாச பரீட்சையாயிற்று. ஆயினும் தேவ வசனம் அவருக்கு சமாதானத்தை அளித்தது. "சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ?" ஆதி.18:25. ஆக வேத வசனத்திற்குத் திரும்பி ஆறுதலையும் சமாதானத்தையும் தேடிக் கொண்டார். இதற்கிடையில் சிறுவர்களுக்குப் போதுமான உணவு அளிக்கப்படவில்லை என்றும், குரூரமாக அவர்கள் நடத்தப்படுகிறார்கள் என்றும் வதந்திகள் பரப்பப்பட்டன. ஆனால் முல்லர், "இப்படிப்பட்ட வேளைகளில் என் ஆத்துமா தேவனையே சார்ந்து கொண்டது. அவரது வாக்குத்தத்தங்களை நான் விசுவாசிக்கிறேன். எந்த நிலையிலும் அவை உண்மையானவை. தேவனுக்கு முன்பாக என் ஆத்துமாவை ஊற்றினேன். முழங்காலிலிருந்து எழும்பும்போது சமாதானத்தால் நிரப்பப்பட்டேன். என் ஆத்துமாவிலிருந்த கலக்கம் விசுவாச ஜெபத்தால் தேவன் மீது சுமத்தப்பட்டது. நான் சமாதானம் பெற்றேன். ...... இவ்வாறு குறை கூறப்பட்டதும் தேவை என்று உணர்ந்தேன். ஏனெனில் நான் தேவனை சார்ந்து வாழுவது எனக்குக் கிடைத்த வரம் என்று மக்கள் எண்ணக் கூடாதே" என்று அவர் குறிப்பிட்டார். 'இதே விசுவாசம் உங்களுக்குக் கிடையாது என்று சாத்தான் உங்களை வஞ்சிக்கக் கூடாது' என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**விசுவாசத்தை பலப்படுத்துதல்**

முல்லர் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதிப்படும்படி பல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்.

விசுவாசம் என்பது ஒரு ஈவு. அதை நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" யாக்.1:17.

விசுவாசம் உறுதியடைய வேத வசனத்தைக் கவனமாகப் படித்து அதை தியானிக்க வேண்டும். அதன் மூலம் தேவன் பரிசுத்தரும், நியாயம் செய்கிறவருமன்றி இரக்கம், அன்பு, கிருபை, தயவு, வல்லமை, ஞானம், உத்தமம் ஆகியவற்றாலும் நிரம்பியவர் என அறிய முடியும். நமது தேவைகளை சந்திக்கக் கூடியவர் மட்டுமல்ல அதற்கான கரிசனையும் விருப்பமுமுடையவர்.

நமக்கு நேர்மையான இருதயமும், சுத்த மனசாட்சியும் வேண்டும்.

நமது விசுவாசம் உறுதிப்படுவதற்கேதுவான சோதனைகளில் நாம் துவண்டுவிடக் கூடாது. தேவனோடு தனித்து நிற்க தைரியம் கொள்ள வேண்டும். அவரையே சார்ந்து அவரையே நோக்கி செயல்படவேண்டும்.

சோதனைகளின்போது நமது சொந்த முயற்சியால் விடுதலை தேடாமல், தேவன் தரும் விடுதலைக் காகக் காத்திருக்க வேண்டும்.

- தொடரும்

## கிறிஸ்து வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வருகிறார்

## *Christ is coming with power and great glory*

R.A. Torrey

ஆண்டவராகிய இயேசு மறுபடியும் வரும் போது, "....... மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை ....." மத்.24:30.

சில வருடங்களுக்கு முன்பு நான் நார்த்ஃபீல்டு என்னுமிடத்தில் ஒரு அரங்கத்தில் கூடியிருந்த மக்களுக்கு இரண்டாம் வருகையைக் குறித்து பேசிக் கொண்டிருந்தேன். அது மிகவும் வெப்பம் நிறைந்த ஒரு நாளாயிருந்தது. நான் பேசிக்கொண்டிருந்த போது அந்த அரங்கத்தின் மீது மேகங்கள் திரண்டன. நான் மத்.24:30-ஐ வாசித்துவிட்டு மனித குமாரன் வானத்து மேகங்களில் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வருகிறார் என்றேன். 'மகிமை' என்ற பதம் என் வாயிலிருந்து விழுந்ததும் திடீரென ஒரு ஒளியும், முழக்கமும் ஏற்பட்டு அரங்கம் முழுவதும் பிரகாசமடைந்தது. மின்னல் ஏற்பட்டு அந்த கட்டிடத்தை தாக்கியிருந்தது. சிலர் இருக்கைகளிலிருந்து துள்ளிக் குதித்து எழும்பி கூச்சலிட்டனர். நான், 'இது ஆண்டவராகிய இயேசுவின் வருகையோடு ஒப்பிடும்போது ஒன்றுமில்லை' என்றேன்.

எனக்கு முன்னாக மூடி அவர்களின் மூத்த சகோதரி திருமதி உவாக்கர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முகம் போதனை அளிப்பதாக இருந்தது. அது அளவில்லா மகிழ்ச்சியாலும் சமாதானத்தாலும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பிரசங்கம் முடித்து அவர்களிடம் சென்று பேசினேன். அப்போது அவர்கள் என்னிடம், "ட்டோறி அவர்களே, எனது வாழ்வில் இது மிக மகிழ்ச்சியான நேரமாயிருந்தது. நிச்சயமாகவே கர்த்தர் வந்துவிட்டார் என்று எண்ணினேன்" என்று என் கைகளைக் குலுக்கிக் கொண்டே கூறினார்கள்.

ஒருவேளை கர்த்தர் இந்நிமிடத்தில் ஆரவாரத்தோடு தூதர் தொனி முழங்க மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வருவதாகயிருந்தால் உங்கள் வாழ்வில் அது மிகுந்த மகிழ்ச்சிக் குரியதாயிருக்குமா! சிந்திப்போம்.

## எழுப்புதலுக்காக இதய கதறல்

**7 மணி நேர உபவாச ஜெபம்**

கர்த்தருடைய கிருபையால் 08.02.2020 சனிக்கிழமை, சென்னை **Christian Assembly** சபையில், காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை ஆண்டவருக்கு மகிமையாக நடைபெற்றது. ஏராளமான ஜனங்கள் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

சபையின் தலைமை போதகர் பாஸ்டர் **விக்டர்** அவர்களுக்காகவும், உதவி போதகர் **டேவிட் கார்டன் நோபிள்** அவர்களுக்காகவும் ஆண்டவரை அதிகமாக துதிக்கிறோம்.

தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

**W. சாமுவேல் பின்னி**

**Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

***Book Packets contains periodicals***

To

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*